1.

**கொடுக்கப்பட்டுள்ள விளம்பரத்தைப் படித்துப் பின்வரும் வினாவுக்கு ஏற்ற விடையைத் தெரிவுசெய்க.**

**இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனம் தொடர்பான விளம்பரம்**

நிறுவனத்தால் அங்கீகரிக்கப்படாத நபர்கள் தங்களைக் காப்பீடு தொடர்பான பாலிசிகளில் ஆசைகாட்டி ஏமாற்றக்கூடும்.

**எச்சரிக்கை**

சில மனிதர்கள் தங்களை **எல்.ஐ.சி** அதிகாரி அல்லது **முகவர்** அல்லது வேறு ஏதேனும் அதிகாரி என்று சொல்லி ஏமாற்றக்கூடும் என்பது குறித்து விழிப்புடன் இருங்கள்.

**செய்ய வேண்டியன**

- ✓ விற்பனை முடிவதற்கு முன்னால், அழைப்பவரைப் பற்றிய அடையாளம் மற்றும் **IRDA** மூலம் உரிமம் வழங்கப்பட்ட முகவர் என்பதை உறுதிசெய்துகொள்ளவும்.
- ✓ திட்டம்/தீர்வுகளுக்கான விவரத்தை அறிந்துகொள்ள www.licindia.in என்ற எங்களது இணையத்தளத்தைப் பார்க்கவும். அல்லது எல்.ஐ.சி நிறுவனத்தின் கிளையைத் தொடர்புகொள்க.
- ✓ உங்களுடைய ஆயுள் காப்பீடு பாலிசிகளைப் பாதுகாப்பாகக் கையாள்வதற்கு எங்கள் இணையத்தளம் www.licindia.in இல் பதிவுசெய்க.
- ✓ தங்களிடம் சந்தேகப்படும்படி யாராவது தொலைபேசியில் தொடர்புகொண்டால் அதைப்பற்றிய முழுவிவரத்தையும் எங்களின் மின்னஞ்சல் முகவரியான co_crm_fb@licindia.comக்குத் தெரியப்படுத்துக.

**செய்யக் கூடாதவை**

- × நம்பகமற்ற தொலைபேசி அழைப்பை நிராகரிக்க வேண்டும்.
- × யாரிடமும் தங்கள் காப்பீட்டு எண்/விவரங்களைக் கூறாதீர்கள்.
- × ஆயுள் காப்பீடு குறித்தும் அதில் வரும் எதிர்காலப் பலன்கள் குறித்தும் சில அதிகாரிகள் மிகைப்படுத்திக் கூறுவார்கள். அவர்களின் பேச்சில் மயங்கிவிடாதீர்கள்.
- × **எல்.ஐ.சி** தன்னுடைய காப்பீட்டுதாரர்கள் தங்களுடைய பாலிசியை முடித்துக்கொள்ளவோ / திருப்பியளிக்கவோ ஊக்கப்படுத்துவதில்லை.

**மக்கள் நலன் கருதி வெளியிடுவோர் – இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனம்**

**1. இந்த விளம்பரம் யாரால் கொடுக்கப்பட்டது?**

1. இந்த விளம்பரம் யாரால் கொடுக்கப்பட்டது?

A. ஆயுள் காப்பீட்டு நிறுவனம்

B. நகராட்சி

C. இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனம்

D. இந்தியக் காப்பீட்டு நிறுவனங்கள்

2. விளம்பரத்தின் படி ஆயுள் காப்பீடு பாலிசியைப் பற்றி எழும் சந்தேகங்களுக்கான விவரங்களறிய நிறுவனத்தை எவ்வாறு தொடர்புக் கொள்ள வேண்டும்?

A. மின்னஞ்சல் மூலமாக

B. தொலைபேசி மூலமாக

C. மடல் மூலமாக

D. தொலை நகலி மூலமாக

3. தங்களுடைய பாலிசியினைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள காப்பீட்டுத்தாரர் எந்த முறையைக் கையாள வேண்டும்?

A. ஆயுள் காப்பீட்டு அதிகாரியிடம் பேசவேண்டும்

B. ஆயுள் காப்பீட்டு நிறுவன முகவரிடம் தொடர்புகொள்ளவேண்டும்

C. நிறுவனத்தின் இணையத்தளத்தில் தங்களுடைய பாலிசி விவரங்களைப் பதிவுசெய்ய வேண்டும்
D. அதிகாரிகளுக்கு மடல் எழுத வேண்டும்

4. இந்த விளம்பரம் யாரிடம் எச்சரிக்கையாக இருக்க அறிவுறுத்துகிறது?
A. பாலிசி எடுப்பவரிடம்
B. உண்மையான எல்ஜசி முகவரிடம்
C. உண்மையான நம்பத் தகுந்த எல்.ஐ.சி அதிகாரியிடம்
D. ஏமாற்றுவதற்குத் தொலைத்தொடர்பு கொள்பவரிடம்

5. இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனம் தமது வாடிக்கையாளரிடம் பாலிசியை முடித்துக் கொள்ள ஊக்குவிக்கிறது. இந்த கருத்தின் உண்மை நிலை என்ன?
A. ஆமாம்
B. எப்பொழுதும் இல்லை
C. எப்பொழுதாவது
D. சில நேரங்களில்

6.ஒரு செய்யுளில் பல அடிகளில் சிதறிக்கிடக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு ஒன்றோடொன்று கூட்டிப் பொருள்கொள்வது எவ்வகைப் பொருள்கோள் ?
A. கொண்டுகூட்டுப் பொருள்கோள்
B. நிரல்நிறைப் பொருள்கோள்
C. ஆற்றுநீர்ப் பொருள்கோள்
D. எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்
7.ஒருமை பன்மை அடிப்படையில் பிழையற்ற தொடரைத் தெரிவுசெய்க.
A. இது புத்தகம் அன்று
B. இது புத்தகம் அல்ல
C. இது புத்தகங்கள் அன்று
D. இவை புத்தகம் அல்ல

8.'புத்தகக் கண்காட்சிக்கு என்னுடன் வருவாயா?' என்ற வினாவிற்கு 'வராமல் இருப்பேனா?' என்று கூறுவது எவ்வகை விடை ?
A. மறை விடை
B. ஏவல் விடை
C. வினா எதிர் வினாதல் விடை
D. உறுவதுகூறல் விடை
9.பின்வருவனவற்றுள் ஐய வினா எது ?
A. இப்பாடலின் பொருள் யாது ?
B. புலவரிடம் பொருள் இல்லையோ ?
C. இப்பாடலை மனப்பாடம் செய்து விட்டாயா?
D. தொலைவில் தோன்றுவது எருதோ ? பசுவோ ?
10'ஆயினும்' என்பது எவ்வகைச் சொல் ?
A. பன்மை விகுதி

B. உவம உருபு

C. இணைப்பிடைச் சொல்

D. கால இடைநிலை

11.

Look at the diagram carefully and answer the questions below




2.Which sector will yield more money than the other sectors?

A. Oil &gas pipeline and Telecom

B. Road and Telecom

C. Railways and Road

D. Road and Oil& gas pipeline

12.I ___________________ a cricket match on television at the moment.

A. was watching

B. watched

C. am watching

D. watch

13.

Look at the diagram carefully and answer the questions below.




5.What is the correct order of sectors with increasing yield of money?

A. Public sector performance

B. National monetisation of public sectors

C. Public sector expenditure

D. National Pipeline

14. She was in a hurry, so she washed the vessels ____________.

A. himself

B. myself

C. herself

D. itself

15.

Look at the diagram carefully and answer the questions below.




1.What is the diagram about?

A. Oil and gas pipeline

B. Telecom Sector

C. Railways

D. Roads

16.

Padma as well as her sisters _____________________ coming today.

A. are

B. is

C. were

D. have

17.The head master said to me, "Where are you from?"(Change into reported speech.)

A. where I was from

B. where I am from

C. where I were from

D. where was I from

18.Mr.Ravi works for a _______national company. It has offices in more than 30 countries

A. intra

B. bi

C. tri

D. multi

19.

Look at the diagram carefully and answer the questions below




3.Pick out the two sectors, when combined, will yield approximately half of the total money.

A. Ten years

B. Eight years

C. Four years

D. Two years

20.

Look at the diagram carefully and answer the questions below




4.How long will this project last?

A. Railways, Road , Oil and gas pipeline, Telecom

B. Telecom, Oil& gas pipeline, Power, Road

C. Telecom, Oil& gas, pipeline, Road, Railways

D. Road, Railways, Power, Telecom

21.

30 மீட்டர் நீளமுள்ள கயிற்றால் கட்டப்பட்ட ஒரு பட்டமானது தரையுடன் $30^\circ$ கோணத்தை ஏற்படுத்துகிறது எனில், தரையிலிருந்து பட்டத்தின் உயரம் ______________

A.

30 மீ

B.

10 மீ

C.

15 மீ

D.

20 மீ

22.

ஒரு இரு சமபக்க செங்கோண முக்கோணம் ABC – ல்,

$\angle B = 90^{\circ}$ எனில், கீழ்க்கண்டவற்றுள் எது சரி?

A.

$\cos A = \sin C$

B.

$\tan A = \tan B$

C.

$\cos B = \sin C$

D.

$\tan B = \tan C$

23.

$\Delta ABC$ என்பது $9\sqrt{3}\ cm^2$ பரப்பளவுக் கொண்ட ஒரு சம பக்க முக்கோணம் எனில், அம்முக்கோணத்தின் பக்கம் = ?

A. 3 செ.மீ

B. 4 செ.மீ

C. 5 செ.மீ

D. 6 செ.மீ

24.

ஒரு முக்கோணத்தின் பக்கங்களின் விகிதம் 3 : 4 : 5 மற்றும் அதன் சுற்றளவு 120 செ.மீ எனில் அம்முக்கோணத்தின் பரப்பளவு

A.

100 செ.மீ$^2$

B.

500 செ.மீ$^2$

C.

600 செ.மீ$^2$

D.

800 செ.மீ$^2$

25.

A (-1,2), B (k, -2) மற்றும் C (7,4) ஆகிய புள்ளிகள் ஒரே நேர்கோட்டின் அமையும் எனில், k இன் மதிப்பு-----------

A. 0

B. −34

C. 17

D. −17

26.

$A(x_1, y_1)$ மற்றும் $B\,(x_2, y_2)$ என்ற இருபுள்ளிகளை P என்ற புள்ளியானது m : n என்ற விகிதத்தில் பிரிக்கிறது எனில் P நடுப்புள்ளியாக அமைவதற்கு நிபந்தனையானது ___________.

A.

$m = n$

B.

$m < n$

C.

$m > n$

D.

$m \neq n$

27.

கொடுக்கப்பட்ட வரைபடத்தாளில் புள்ளிகள் A மற்றும் D க்கு இடையேயுள்ள தொலைவு _____________




A. 1
B. 4
C. 3
D. 5

28.

$\sin\theta_1 = \frac{12}{13}$ மற்றும் $\cos\theta_2 = \frac{5}{13}$ எனில், $\theta_1$ மற்றும் $\theta_2$ விற்கு இடையேஉள்ள தொடர்பு

A.

$\theta_1 - \theta_2 = 90^\circ$

B.

$\theta_1 + \theta_2 = 120^\circ$

C.

$\theta_1 + \theta_2 = 180^\circ$

D.

$\theta_1 = \theta_2$

29.

இணைகரம் ABCDஇல் அடுத்தடுத்த கோணங்கள் $\angle A$ மற்றும் $\angle B$ இன் இருசம வெட்டிகள் Pஇல் சந்திக்கின்றன எனில், $\angle APB$ என்பது ______

A.

$90^0$

B.

$180^0$

C.

$270^0$

D.

$360^0$

30.

கொடுக்கப்பட்ட படத்தில், PS என்பது நடுக்கோடு மற்றும் PQ = PR எனில்

$\angle QPS = $ ______




A.

$40^0$

B.

$50^0$

C.

$80^0$

D.

$90^0$

31.சீதா மூன்று கரைசல்களைத் தயாரிக்கிறாள். பீக்கர் A இல், அவர் 100 மி.லி. தண்ணீரில் 5 கிராம் சர்க்கரையைக் கரைக்கிறாள். பீக்கர் B யில், 100 மி.லி. தண்ணீரில் 100 மி.லி. பாலை கரைக்கிறாள். பீக்கர் C யில், 5 கி கோதுமை மாவை 100 மி.லி. தண்ணீரில் கரைக்கிறாள். பின்னர் அவள் ஒரு மின்விளக்கைப் பயன்படுத்தி மூன்று பீக்கர்கள் வழியாக ஒளிக்கற்றை செலுத்துகிறாள். ஒளிக் கற்றை பீக்கர் C இல் தெரியவில்லை, பீக்கர் A மற்றும் பீக்கர் B இல் தெரிகிறது என்று அவள் கவனிக்கிறாள். பீக்கர் A,B மற்றும் C இல் எந்த வகைக் கரைசல் உள்ளது?

A. A– உண்மைக் கரைசல்,B– கூழ்மக்கரைசல், C– தொங்கல்

B. A– கூழ்மக்கரைசல்,B – உண்மைக் கரைசல், C– தொங்கல்

C. A– தொங்கல், B– உண்மைக் கரைசல், C– கூழ்மக்கரைசல்

D. A– உண்மைக் கரைசல், B– தொங்கல், C– கூழ்மக்கரைசல்

32.

படத்தில் காட்டப்பட்டுள்ளபடி 4R மின்தடை கொண்ட கம்பியானது வட்ட வடிவில்  வளைக்கப்பட்டுள்ளது. அவ்விட்டத்தின் முனைகளுக்கு இடையே அமைந்துள்ள மின்தடையின் தொகுபயன் யாது?




A. R
B. 4R
C. 2R
D. 8R

33.30 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் 75 கி நீரில் கரைந்து தெவிட்டிய கரைசலை உருவாக்கத் தேவையான நாம் சோடியம் குளோரைடு நிறை என்ன? 30 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் நாம் உண்ணும் உப்பின் கரைத்திறன் 36கி ஆகும்
A. 27 கி
B. 18 கி
C. 36 கி
D. 9 கி

34.மண்ணெண்ணெய் நிரப்பப்பட்ட பலூன் ஒன்றினை நீரினுள் அழுத்தும்போது, அதுஉடனடியாக மேலெழும்பி, நீரின் மேல்மிதக்கும். இதற்கு பின்வருவனவற்றில் எதுசரியான காரணம் அல்ல?
A. மண்ணெண்ணெய் உள்ள பலூனின் அடர்த்தி நீரின் அடர்த்தியை விட குறைவாக உள்ளது.
B. பலூனின் மேல் மற்றும் கீழ் பகுதிகளுக்கிடையே அழுத்த வேறுபாடு உள்ளது.
C. பலூனின் அடிப்பகுதியில் மேல்நோக்கிய உந்துவிசை உள்ளது.
D. மண்ணெண்ணெய் நிரப்பப்பட்ட பலூன் அழுத்தம் காரணமாக சுருங்குகிறது.
35.

கீழ்க்காணும் எலக்ட்ரான் அமைப்புகளுக்கு உரிய தனிமத்தை கண்டறிந்து அதை அத்தனிமத்தின் பயன்பாட்டுடன் பொருத்திக்காட்டு.

| | | | |
|---|---|---|---|
| 1 |  | I |  உரம் தயாரிப்பதில் அதிகமாகப் பயன்படுகிறது. |
| 2 |  | II |  பேட்டரி தயாரிக்கப் பயன்படுகிறது. |
| 3 |  | III |  எலும்புகளில் அதிகமாக காணப்படுகிறது. |
| 4 |  | IV |  பலூன்களை நிரப்பப் பயன்படுகிறது. |
| 5 |  | V |  நிலக்கரியில் அதிகமாகக் காணப்படுகிறது. |

A. 1– II, 2– IV, 3–III, 4–I, 5–V
B. 1– III, 2– V, 3–II, 4–I, 5–IV
C. 1– I, 2– II, 3–III, 4–IV, 5–V
D. 1– III, 2– IV, 3–I, 4–II, 5–V

36. X– என்ற ஒரு தனிமத்தின் அணு நிறை எண் 40 மற்றும் அதன் அணு எண் 19 எனில், அத்தனிமத்தில் உள்ள நியூட்ரான்களின் எண்ணிக்கை மற்றும் அதன் பெயரைக் கண்டறியவும்.மேலும் தனிம வரிசை அட்டவணையில் அது எந்த தொகுதியைச் சேர்ந்தது என்றும் கண்டறியவும்.
A. 20 நியூட்ரான்கள், Ca மற்றும் தொகுதி I
B. 21 நியூட்ரான்கள், Sc மற்றும் தொகுதி II
C. 21 நியூட்ரான்கள், K மற்றும் தொகுதி I
D. 20 நியூட்ரான்கள், K மற்றும் தொகுதி III

37.ஹெப்படைடிஸ் A தொற்று HAV என்ற வைரஸாலும் டைபாய்டு காய்ச்சல் சால்மனெல்லா டைஃபி என்ற பாக்டீரியாவாலும் உருவாக்கப்படுகிறது. பின்வரும் எந்த முறையால் ஹெப்படைடிஸ் A மற்றும் டைபாய்டு காய்ச்சல் தொற்றினை தடுக்க இயலும்
A. கொசுவிரட்டி வேதிப்பொருளை பயன்படுத்தி கொசுக் கடியினை தவிர்ப்பதால்
B. N 95 முக கவசம் அணிவதால்
C. மாசுப்பட்ட உணவினை உட்கொள்வதனை தவிர்ப்பதால்
D. முக சவரம் செய்யும் பிளேடு / கத்தியை பிறருடன் பகிர்வதை தவிர்ப்பதால்

38.உன் தோட்டத்திலுள்ள ஒரு ரோஜா செடியில் இருந்து தண்டு வெட்டுதல் மற்றும் பதியம் போடுதல் முறை மூலமாக சேய் ரோஜா செடிகளை உருவாக்குகிறாய். இக்கருத்தோடு தொடர்புடைய கீழ்கண்ட கருத்துக்களில் எது தவறானது.

A. புதிய ரோஜா செடிகள் வீரியமற்ற விதைகளை உருவாக்கும்

B. மிகக் குறுகிய காலத்தில் புதியரோஜா செடிகள் உருவாகின்றன.

C. தாய் செடியில் உள்ள பண்புகள் அனைத்தும் சேய் ரோஜா செடிகளில் இருக்கும்.

D. மாறுபட்ட சுற்று சூழ்நிலைகளை தாங்கும் திறன் குறைவாக இருக்கும்.

39.

ஓர் இணை ஒளிக்கற்றை குவி லென்ஸ் ஒன்றின் மீது விழுகிறது. அக்கற்றைக்கு என்னவாகும் என்பதை கீழ்க்கண்ட எப்படம் காட்டுகிறது?




A. A

B. B

C. C

D. D

40.

ஒரு குவிலென்சால் உருவாக்கப்பட்ட பொருளின் பிம்பத்திற்கான கதிர் வரைபடம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. லென்சின் குவியதூரம் என்ன?




A. 30 செ.மீ

B. 60 செ.மீ

C. 80 செ.மீ

D. 40 செ.மீ

41.

படத்தினைப் பார்த்து பதிலைக் கூறுக.

ஈராளையும், சவுதிஅரேபியாவையும் பிரிக்கும் வளைகுடா

____________



A. அக்காபா வளைகுடா
B. சூயெஸ் வளைகுடா
C. ஏடென் வளைகுடா
D. பாரசீக வளைகுடா

42.ஜூம் சாகுபடி பற்றி உண்மை இல்லாத வாக்கியங்களைத் தேர்ந்தெடுக்கவும். a. இது ஒரு பாரம்பரிய விவசாய முறையாகும். அங்கு முதலில் மரங்கள் மற்றும் பிற தாவரங்களின் நிலம் அழிக்கப்பட்டு, எரிக்கப்பட்டு பின்னர் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான ஆண்டுகள் பயிரிடப்படுகிறது. b. இது ஒரு நவீன விவசாய முறையாகும், முதலில் மரங்கள் மற்றும் பிற தாவரங்களின் நிலம் அழிக்கப்பட்டு, எரிக்கப்பட்டு பின்னர் நீண்ட காலம் பயிரிடப்படுகிறது. c. ஜூம் சாகுபடி, மாற்றுச் சாகுபடி, சாய் மற்றும் எரியும் சாகுபடி என்றும் அழைக்கப்படுகிறது. d. இது பழமையான சாகுபடி முறைகளில் ஒன்றாகும்.
A. a & c
B. a & d
C. c & d
D. b மட்டும்

43.பொருளாதார வளர்ச்சி தொடர்பான உண்மையான வாக்கியங்களைக் கண்டுபிடி. i. முழுமையான வறுமையை ஒழிக்க, பொருளாதார வளர்ச்சி இன்றியமையாதது மற்றும் போதுமானது. ii. வருமான நிலை அல்லது ஜிடிபி, வளர்ச்சியின் ஒரு அளவீடாக விமர்சிக்கப்படுகிறது, ஏனெனில் இது வருமான விநியோகத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளாது. iii. வருமானம் அதிகரிப்பதால், சேவைத் துறையிலிருந்து தொழில் துறைக்கு உழைப்பில் மாற்றம் ஏற்படுகிறது.
A. (i) சரி (ii) தவறு (iii)தவறு
B. (i) சரி (ii)சரி (iii)சரி
C. (i) தவறு (ii) சரி (iii) தவறு
D. (i)சரி (ii) சரி (iii)தவறு

44.பாகிஸ்தானையும் , ஆப்கானிஸ்தானையும் இணைக்கும் மலைப் பாதையை கண்டுபிடி. பண்டைய இந்தியாவில் இது ஓர் எல்லைப் பகுதி. தெற்காசியாவிற்குள் நுழைவதற்கு இது தான் வழியாகும். இது ஹிந்துகுஷ் மலைத்தொடரில் அமைந்துள்ளது.
A. கைபர் போலன் கணவாய்
B. ஷிப்கி லா கணவாய்
C. கோண்டோகோரோ கணவாய்

D. ஹயல் கணவாய்

45.ஜனநாயகத்தில் அரசியல் மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகள் பற்றிய ஆய்வுகள் வெளிப்படுத்துவது.
A. ஜனநாயகமும் வளர்ச்சியும் ஒன்றாக செல்கின்றன.
B. ஜனநாயக நாடுகளில், ஏற்றத்தாழ்வுகள் உள்ளன.
C. சமத்துவமின்மை சர்வாதிகாரத்தில் இயங்கவில்லை.
D. ஜனநாயகத்தை விட சர்வாதிகாரம் சிறந்தது.

46.பின்வரும் மக்கள் தொகை மற்றும் உணவு பாதுகாப்பு தொடர்பான வாக்கியங்களைப் படித்து சரியான விடையைத் தெரிவு செய்யவும். கூற்று: உணவு தேவை அதிகரிப்புக்கு மக்கள்தொகை வளர்ச்சி ஒரு முக்கிய உந்துதலாகும்; ஒரு நபருக்கு தேவைப்படும் உணவு வகைகள் மற்றும் அளவுகளில் ஏற்படும் மாற்றங்களின் மூலம் அதன் தாக்கம் வெளிப்படுகிறது. தனிநபர் வருமானம் அதிகரித்துள்ளதால், உணவில் அதிக கலோரிகள் மற்றும் மாறுபட்ட மற்றும் விலையுயர்ந்த உணவுகள் இரண்டும் சேர்க்கப்பட்டுள்ளது. காரணம்: சில உணவு மற்றும் உற்பத்தித் தேர்வுகள் பசுமை இல்ல வாயு வெளியேற்றுவதன் அடிப்படையில் அதிக சுற்றுச்சூழல் சுமைகளைக் கொண்டுள்ளன. நிலைத்தன்மையைக் கருத்தில் கொண்டு, ஆரோக்கியமான உணவுகள் உட்கொள்வதை ஊக்குவிப்பதற்கு, உணவுச் சூழலைப் பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகள் தேவைப்படுகிறது.
A. கூற்று சரியானது ஆனால் காரணம் பொருத்தமற்றது.
B. கூற்று சரியானதல்ல ஆனால் காரணம், மக்கள்தொகை மற்றும் உணவுப் பாதுகாப்புக்கு ஏற்றது.
C. கூற்று மற்றும் காரணம் இரண்டிற்கும் மக்கள்தொகை மற்றும் உணவுப் பாதுகாப்புடன் எந்த தொடர்பும் இல்லை.
D. கூற்று மற்றும் காரணம் இரண்டும் பொருத்தமானவை. மக்கள்தொகை மற்றும் உணவுப் பாதுகாப்புடன் இணைகின்றன.

47.
சரியான வரிசையைக் கண்டுபிடி.



A. பாலினசமத்துவம்,சமத்துவம்,சகோதரத்துவம்,சுதந்திரம்
B. சமத்துவம்,சுதந்திரம், பாலினசமத்துவம், சகோதரத்துவம்,
C. சகோதரத்துவம், சமத்துவம், பாலினசமத்துவம்,சுதந்திரம்,
D. சமத்துவம். பாலினசமத்துவம், சகோதரத்துவம்,சுதந்திரம்

48.இந்தக் காற்றோட்டத்தின் துணையுடன் கப்பல்கள் வெகு விரைவாக தமிழகத் துறைமுகங்களை அடைய முடியும் என்ற உண்மையை ஐரோப்பிய மாலுமிகள் அறிந்திருந்தனர்.
A. தென்மேற்குப் பருவக்காற்று
B. வடகிழக்குப் பருவக்காற்று
C. வடமேற்குப் பருவக்காற்று
D. தென்கிழக்குப் பருவக்காற்று

49.ஒரு நாட்டின் சாதாரண குடியிருப்பாளர்களால் தயாரிக்கப்படும் அனைத்து இறுதி பொருட்கள் மற்றும் சேவைகளின் மதிப்பு, ஒரு வருடத்தில் நாட்டின் உள்நாட்டு எல்லைக்குள் அல்லது வெளியில் செயல்பட்டால் ---------- என்றழைக்கப்படுகிறது.

A. மொத்த தேசிய வருமானம்

B. நிகர தேசிய வருமானம்

C. மொத்த உள்நாட்டு உற்பத்தி

D. நிகர உள்நாட்டு உற்பத்தி

50.பின்வருவனவற்றில் எது உணவுப் பாதுகாப்புடன் நெருங்கிய தொடர்புடையது. i. இந்திய உணவு கழகம் (FCI) மூலம் அரசால் கொள்முதல் செய்யப்பட்ட கோதுமை மற்றும் அரிசி போன்ற உணவு தானியங்களின் இருப்பு. ii. FCI– யால் வாங்கப்படும் உணவு, சமூகத்தின் ஏழைப் பிரிவினரிடையே நியாய விலைக் கடைகள் (FPS) எனப்படும் அரசு ஒழுங்குபடுத்தப்பட்ட ரேஷன் கடைகள் மூலம் விநியோகிக்கப்படுகிறது. iii. விதைகளின் உயர் விளைச்சல் வகைகள் (HYV) அறிமுகம், ரசாயன உரங்கள் மற்றும் நீர்ப்பாசனத்தின் அதிகரித்த பயன்பாடு, இந்தியாவை உணவு தானியங்களில் தன்னிறைவு பெற வழிவகை செய்தது. iv. மக்கள்தொகையின் வளர்ச்சி விகிதம் என்பது உணவுப் பாதுகாப்பில் நேர்மறை அல்லது எதிர்மறையாக இருக்கலாம். மக்கள்தொகையின் நேர்மறையான வளர்ச்சி விகிதம் என்பது ஒரு பகுதியில் வாழும் மக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஆகும். அதேசமயம் எதிர்மறை வளர்ச்சி விகிதம் என்பது குறைந்து வரும் மக்கள்தொகையைக் குறிக்கும். இரண்டிற்கும் உணவுப் பாதுகாப்பில் அதன் பங்குள்ளது.

A. (i) மற்றும் (iv)

B. (ii) மற்றும் iv)

C. (iii) மற்றும் (ii)

D. (i) மற்றும் (ii).